# உதயன்

விலை ரூபா -00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆனி 13 வெள்ளிக்கிழமை (27-06-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 208


# புலிகள் தாக்குதல் நடத்தினாலும் படையினரின் நகர்வு தொடரும்!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

"விடுதலைப் புலிகள் செவ்வாயன்று வன்னிப்பகுதியில் பாரிய பதில் தாக்குதலை நடத்தியபோதும், படையினர் தமது இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து மேற்கொள்வார்கள்".

இப்படி இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

படையினர் தமது 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பித்த பின்னர் இவரால் நடத்தப்பட்ட முதலாவது செய்தியாளர் மாநாடு இதுவாகும்.

விடுதலைப் புலிகள் இக்கட்டான நிலையில் உள்ளனர். படையினரது முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தப் பெரும் பிரயத்தனம் செய்து வருகிறார்கள்.

படையினர் புலிகளின் நிலைகளை நோக்கி மெதுவாக முன்னேறி வருகின்றனர். அவர்கள் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்கத் தயார் நிலையில் இருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

செவ்வாயன்று இடம்பெற்ற தாக்குதலின்போது இராணுவத்தின் மோட்டார் பீரங்கிகளைப் புலிகள் கைப்பற்றியுள்ளனர் என வெளியான தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் பிரிகேடியர் தெரிவித்தார். (இ-4)

## 4 மின்மாற்றிகள் திருமலையில் தகர்ப்பு

### ஒரே இரவில் சம்பவம்

திருகோணமலை, ஜூன் 27

திருகோணமலை மாவட்டத்தில் அன்பு வழிபுரம் சந்தி அபயபுர, மிகுந்தபுர, செல்வநாயகபுரம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த 4 மின்மாற்றிகள் நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் இனந்தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ரோந்து சென்ற படையினர் மீது மூதூரில் புலிகள் தாக்குதல்!

திருகோணமலை, ஜூன் 27

மூதூர்ப் பிரதேசத்தில் மகிந்தபுர என்னும் இடத்தில் கால்நடையாக ரோந்துசென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை தாக்குதல் ஒன்றை மேற்கொண்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை படையினரின் நிலைகள் சேதம்

## மீண்டும் பலப்படுத்தும் நடவடிக்கையில் நேற்று ஈடுபாடு

கொழும்பு, ஜூன் 27

புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான பெரியமடுப் பகுதியில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையுள்ள படையினரின் நிலைகளுக்குப் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாக வெளிநாட்டுச் செய்தி ஏஜென்ஸிகள் நேற்றுத் தெரிவித்தன.

ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு இருந்த அத்தனை இராணுவப் பாதுகாப்பு அரண்களையும், ஆயுத நிலைகள், ஆட்லறித் தளம் அனைத்தையும் புலிகள் அழித்து விட்டனர் என்றும் —

அவற்றை மறுபடியும் எழுப்புவதற்கான பணிகளில் இராணுவம் தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் 38 புலிகளின் சடலங்களைக் கைப்பற்றியதாக தெரிவித்தனர்.

இதே நேரம் — பெரிய மடுத் தாக்குதலில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 119 ஆக உயர்ந்ததாகவும் — காயமடைந்த படையினரின் எண்ணிக்கை 204 ஆக உயர்ந்ததாகவும் — சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-4-21-164)

## அம்பாறையில் ஊர்காவலர் இருவர் பலி

மட்டக்களப்பு, ஜூன் 27

அம்பாறை மாவட்டம் மகாஓயாவில் நேற்று அதிகாலை ஊர்காவலர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் 2 ஊர்காவல் படையினர் கொல்லப்பட்டனர். (இ-3-21)

## ஐ. நா. அதிகாரிகள் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணத்தில் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு வந்திருந்த ஐ நா. அமைப்புக்களின் மூன்றுபிரதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பெரியமடுப் பகுதியில் நேற்று அமைதி!

லண்டன், ஜூன் 27

புலிகளின் தாக்குதல் இடம்பெற்ற பெரியமடுப் பகுதியில் நேற்று அமைதி நிலவியதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

பி. பி. ஸி. செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

புளியங்குளத்தை அண்மித்த பெரியமடு, பனிக்க நீராவி ஆகிய பகுதிகளில் உள்ள முகாம் தொகுதி மீதே புலிகள் செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தினர்.

போர் முனைக்கு பின்னணித்தளமாக இருக்கின்ற முக்கியமான படை நிலைகள், அத்துடன் இராணுவ தளபாடங்கள், ஆயுதங்கள்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 27

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 'சஜிந்த' கப்பல் மூலம் 500 பயணிகளை இன்று அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று கப்பலில் செல்ல விண்ணப்பித்தவர்களை

(8 ஆம் பக்கம் பார்க்க )

## 74 பொலீஸார் தப்பி வவுனியா வந்தனர்

வவுனியா, ஜூன். 27

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையின்போது படையினர் கைப்பற்றிய பகுதிகளை தக்கவைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸாரில் 74 பேர் நேற்று வவுனியாவுக்கு தப்பி வந்தனர் என்று வவுனியாச் செய்திகள் தெரிவித்தன.

வவுனியா வந்த இவர்களைச் சமாதானம் செய்து மீண்டும் போர் முனைக்கு அனுப்ப படை அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டனர் என்றும் கூறப்பட்டது. (இ-3-164)

# அரசாங்கத்தின் தீர்வு யோசனை நவம்பருக்கு முன் நாடாளுமன்றில்

## பீரிஸ் நேற்று மீண்டும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27


அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான சட்டவரைவு எதிர் வரும் நவம்பருக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் நேற்று கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

நவம்பரில் வரவு- செலவுத் திட்டக்கூட்டத்தொடர் ஆரம்பிக்க முன்னர் இந்த வரைவை சமர்ப்பிக்க ஜனாதிபதி உறுதியான முடிவு எடுத்துள்ளார் என்றும் பீரிஸ் தெரிவித்தார்.

அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைகளையும் பெற்ற பின்பு தனது திட்டத்தை அரசு முன்வைக்கும் என்றும் பீரிஸ் கூறினார்.

அதேசமயம் இத் திட்டத்துக்கு ஐ. தே. க. ஆதரவு கொடுக்குமா என்பது கேள்விக்குரிய விடயம் என்றும் ஐ. தே. க. ஆதரவு இல்லாமல் இத்திட்டம் நடைமுறைக்கு வருவது சாத்தியமில்லை என்றும் பி.பி.ஸி. தெரிவித்தது. (இ-3)

## முச்சந்தி முரளி



ஒன்றை திரும்பத் திரும்பச் சொல்ல சரிவந்திடும் என்ற நினைப்புப் போல...!

## எழுச்சிப் பேரணி

வன்னிப் பகுதியில் இன்னல் படும் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்புமாறு கோரி எதிர் வரும் 2 ஆம் திகதி புதுக்குடியிருப்பில் எழுச்சிப் பேரணி ஒன்று நடைபெற உள்ளது.

பொது அமைப்புக்களின் காப்பகத்தின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தப் பேரணியில் இடம் பெயர்வால் இன்னல்படும் ஆயிரக்கணக்கான மக்கள் பங்குபற்ற உள்ளனர்.

பேரணி முடிவில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் மகஜர் சமர்ப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கக்கடையில் திருட்டு

யாழ்ப்பாணம் ஜூன் 27 திருநெல்வேலிபலநோக்குக் கூட்டுறவுச்சங்க கோண்டாவில் கிழக்கு 19-ம் இலக்கக் கிளையில் இருந்து நேற்று முன்தினம் இரவு உணவுப் பொருள்கள் திருடப்பட்டன

இரவுவேளை கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர் கோஷ்டி அங்கிருந்த அரிசி, மாவு மூடைகளை எடுத்துச்சென்று விட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-15)


உ

சாவகச்சேரி சங்கத்தானை

அருள்மிகு

ஸ்ரீ கந்தசுவாமி ஆலய

மஹோற்சவப் பெருவிழா - 1997

டி ஆலய வருடாந்த பெருவிழா ஈசுர வருட ஆனி 11 ஆம் நாள் (25 — 06 — 97) புதன்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி நடைபெறுகிறது.

மாம்பழத் திருவிழா 28 - 06 - 97 சனி மாலை 3. 30 மணி

சப்பறத் திருவிழா 02 - 07 - 97 புதன் மாலை 5. 00 மணி

தேர்த் திருவிழா 03 - 07 - 97 வியாழன் பகல் 9. 30 மணி

தீர்த்த திருவிழா 04 - 07 - 97 வெள்ளி 10. 15 மணி

மஹோற்சவிழா: பிரதமகுரு "சிவாகம வித்பத்ஜோதி" சிவஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரக்குருக்கள் புன்னாலைக்கட்டுவன்

அனைவரும் வருக அருள் பெறுக!

ஆலய பரிபாலன சபை

விளம்பர அன்பளிப்பு:

முருகன்

கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம்,

கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி/1020)


# வன்னி மக்கள் கஷ்ட நிலை குறித்து

# தமிழ் கட்சிகள்பீரிஸிடம் தெரிவிக்கும்

கொழும்பு, ஜூன் 27 வன்னியில் நடக்கும் இராணுவ நடவடிக்கை காரணமாக அங்கு மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் குறித்து தமிழ்க் கட்சிகள் நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பீரிஸிடம்எடுத்துக் கூறவிருக்கின்றன.

எதிர்வரும் 3ஆம் திகதி அமைச்சர் பீரிஸை தமிழ்க் கட்சிகள் சந்திக்க உள்ளன.

வன்னியில் உள்ள மக்கள் உணவு, மருந்துப் பொருள்கள் இன்றிக் கஷ்டப்படுவதாக தமிழ்க் கட்சிகள் தெரிவிக்கின்றன. (இ-3)

# வேலை நிறுத்தம் நடைபெறுமானால் ராணுவத்தை ஈடுபடுத்தி பஸ்சேவை

## பௌசி எச்சரிக்கை

"மக்களுக்காக சேவையாற்றும் போக்குவரத்துத் துறையினர் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டால், இராணுவத்தினரை அமர்த்தி அச் சேவைகளை நடத்துவேன்."

இப்படி எச்சரிக்கை விடுத்துள்ளார் புதிய போக்குவரத்து அமைச்சர் பௌசி.

யட்டிநுவர மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சபைக்கு விஜயம் செய்த அமைச்சர் அங்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்கள் சேவையில் உள்ள போக்குவரத்துத் துறையினர் தமது பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வேண்டும். அதை விட்டு வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டு மக்களுக்கு சிக்கல்களை ஏற்படுத்த முனைய வேண்டாம் என்று அமைச்சர் கூறினார். (இ-3-150)

# நல்லூர் லயன்ஸ் கழகத்தினர் யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்து உதவி

யாழ்ப்பாணம், ஜூன் 27 யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களில் இருதய நோயாளர்களுக்கு வேண்டிய மருந்து வகைகளை நல்லூர் லயன்ஸ் கழகம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

35 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த மருந்து வகைகளை கொழும்பில் இருந்து கப்பல் மூலம் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கைகளை லயன்ஸ் கழகம் மேற்கொண்டுள்ளது.

இதேபோன்று நோயாளர் நலன்கருதி அத்தியாவசிய தேவைகளுக்கான மருந்து வகைகளை ஏனைய நிறுவனங்களும் அன்பளிப்பு செய்யலாம் என்று வைத்தியசாலை நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

தேவைப்படும் வேளைகளில் அத்தியாவசியமான மருந்து வகைகளை யாழ். போதனா வைத்தியசாலை வெளிச்சந்தையில் நேரடியாகக் கொள்வனவு செய்ய முடியும். ஆனால் ஆஸ்பத்திரிக்குரிய மொத்த வருடாந்தச் செலவின ஒதுக்கீட்டில் இரண்டு சதவீதத்தை மட்டுமே அதற்குச்செலவிடலாம்.

கொழும்பில் உள்ள "சிவில் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்" பிரிவே யாழ். ஆஸ்பத்திரிக்குரிய மருந்து வகைகளை வழங்குகிறது. ஆனால் அவை போதிய அளவில் உரிய நேரத்தில் வந்து கிடைப்பதில்லை. அவசரம் தேவைப்படும் மருந்துகளை வெளிச்சந்தையில் நேரடியாக வாங்குவதற்கு ஒதுக்கப்படும் நிதியும் போதாது.

அதனால் தனியார் நிறுவனங்கள் மற்றும் தர்மம் செய்ய விரும்புவோர் ஆஸ்பத்திரி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு தேவை அறிந்து அத்தியாவசிய மருந்துகளை அன்பளிப்புச் செய்யலாம் என்று ஆஸ்பத்திரி நிர்வாக வட்டாரங்கள் உதயனுக்கு தெரிவித்தன. (அ-15)

## இலங்கைத் தமிழருக்கு உதவ பாரதீய ஜனதா நிதி திரட்டும்

சென்னை, ஜூன் 27

இலங்கையில் யுத்தத்தினால் துயரங்களை அனுபவித்து வரும் தமிழ்மக்களுக்கு உதவ இந்தியா முழுவதும் நிதி திரட்டப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சியின் அகில இந்தியத்துணைத் தலைவர் ராஜகோபால் தெரிவித்துள்ளார்.

கரூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

தினமும் அவல வாழ்க்கை வாழும் தமிழ் மக்களுக்கு உணவு, மருந்து வகைகளை வழங்க வசதியாக ஆரம்பிக்கும் இந்த நிதி சேகரிக்கும் திட்டத்துக்கு சகலரும் ஆதரவு தருமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-3)

## வாய்ப் புற்று நோய், நீரிழிவு: 276 பேருக்கு பரிசோதனை

தென்மராட்சி, ஜூன் 27 சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களமும், சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து அண்மையில் மட்டுவில் வடக்கு சபீனா பாலர் பாடசாலையில் நடத்திய வாய்ப் புற்றுநோய், நீரிழிவு சிகிச்சை முகாமில் 276 பேருக்கு பரிசோதனை செய்யப்பட்டபோது 3 பேர் வாய்ப் புற்றுநோயினாலும், 5 பேர் நீரிழிவு நோயினாலும் பீடிக்கப் பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

வாய்ப் புற்று நோய்ப் பரிசோதனையில் கலந்து கொண்ட 276 பேரில் 31 பேருக்கு வாய்ச் சுகாதாரக் குறைபாடுகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களில் 11 பேருக்கு வாய்ப் புற்றுநோய் ஏற்படக் கூடிய அபாயம் உள்ளதாகவும், 5 பேருக்குத் தொடர் நடவடிக்கை மூலம் பாதுகாக்கப்படல் வேண்டுமெனவும், மூவர் வாய்ப் புற்று நோயினால் பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டது. (இ-117)

## விவசாயி மிதிவெடியில்

அக்கரைப்பற்றுப் பகுதியில் விவசாயி ஒருவர் மிதிவெடியில் சிக்கி தனது இடது காலை இழந்தார்.

நேற்று நண்பகல் இச் சம்பவம் இடம்பெற்றது. (இ-3-21)

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா இராசலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர் - வேலணை)

வேலணை 1 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லப்பா இராசலிங்கம் 24-06-1997 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா மங்கையர்க்கரசி தம்பதிகளின் மூத்த புதல்வரும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், யோகேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், செழியன் (பொறியியல் பீட மாணவன் - கனடா), மேகலா (யாழ். பல்கலைக்கழக 4 ஆம் வருட வணிகத்துறை மாணவி), நிரஞ்சன் (ஸ்ரீ ஜயவர்த்தனபுர 1ஆம் வருட மருத்துவபீட மாணவன்), கேசவன் (ஜேர்மனி), முரளிதரன் (யாழ். இந்துக் கல்லூரி 98 ஆம் ஆண்டு கணிதத்துறை மாணவன்)ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை-கனடா), தர்மலிங்கம் (ஆசிரிய ஆலோசகர் - கொழும்பு), காலஞ் சென்ற சண்முகலிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவலோகநாதன் (ஓய்வு பெற்ற அதிபர் - கனடா), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் கமலாதேவி (ஆசிரியை - கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி), சாந்தினி (ஆசிரியை, ஸ்ரான்லிக் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும், சதாபானு, சுமுகன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், உமா, ராசன் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை (27-06-97) காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

இல. 346, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (48041)

## புவனேந்திரன் கமலாதேவி

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட புவனேந்திரன் கமலாதேவி 26 - 06 - 97 அன்று காலமானார்.

அன்னார் புவனேந்திரனின் அன்பு மனைவியும், சயந்தா, வாசுதேவன், சஜிதா, பிரணவன் ஆகியோரின் தாயாரும், கௌசலாதேவி, சற்குணராசா தெய்வேந்திரராசா, குகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-06-97) நெல்லியடி, கரவெட்டியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சற்குணராசா
(சகோதரர்)

நெல்லியடி,
கரவெட்டி.

(48039)


BOSCO INSTITUTE

25, நக்கா றோட், யாழ்ப்பாணம்.

தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள், றோணியோ வேலைகள் சிறந்த முறையில் குறைந்த விலையில் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

"Bosco Roneo"

(48038)

NEW SCIENCE ACADEMY NALLUR

A/L 97

கணக்கியல்

திரு. பாலவாசன்

"விசேடப் பகுப்பாய்வு"

ஆரம்பம்: 01-07-97

நேரம்: 6.30 - 8.30

(48051) செவ்வாய்

புலமைப் பரிசில் '97

22- 06- 97 எமது நிறுவனத்தில் நடந்த 29 ஆவது பரீட்சையில் உயர்ந்த புள்ளி பெற்ற முதல் மூவர்

1) மதுராந்தகா செல்வரத்தினம் — 191 புள்ளி
கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்

2) இரங்கநாதன் கோகுல்நாத் — 187 புள்ளி
புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தா கல்லூரி

3) ஷாலினி திருக்கேதீஸ்வரன் — 181 புள்ளி
கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள்!

★ 29- 06- 97 ஞாயிறு 30 ஆவது பரீட்சை வழமைபோல் நடைபெறும்.

BOND INSTITUTES யாழ்ப்பாணம்.

(48046)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரபாத்தை சந்திக்க நத்தனியாகு விருப்பம்



ஜெருஸலேம் ஜூன் 27

தடைபட்டுப் போயுள்ள மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் பலஸ்தீன அதிபர் யசீர் அரபாத்தைச் சந்திக்க இஸ்ரேலியப் பிரதமர் நத்தனியாகு விருப்பம் தெரிவித்துள்ளார். ஆனால் இது தொடர்பாக யசீர் அரபாத் பதில் எதுவும் தெரிவிக்கவில்லை என்று பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

17 உறுப்பினர்கள் அடங்கிய இஸ்ரேலியத் தூதுக்குழு ஒன்று கடந்த திங்களன்று மேற்கு நகரான ரமலாவில் பலஸ்தீன அதிபரைச் சந்தித்தது. அப்போது இஸ்ரேலியப் பிரதமரின் இந்த விருப்பத்தைத் தெரிவிக்கும் செய்தியை அவரிடம் இஸ்ரேலியப் பிரதிநிதி கையளித்தார்.

இஸ்ரேல் பிரதமரின் செய்தியைப் பெற்றுக்கொண்ட அரபாத் அதற்குப் பதில் ஏதும் தெரிவிக்கவில்லை.

''சமாதான உடன்படிக்கைகளை அமுல் செய்யுமாறு நத்தனியாகுவிடம் கூறுங்கள்'' என்று மட்டும் அரபாத் அவர்களிடம் தெரிவித்தார்.

அரபு கிழக்கு ஜெருஸலேமில் யூதக் குடியிருப்புகளை அமைக்க இஸ்ரேல் ஆரம்பித்ததை அடுத்து மத்திய கிழக்கு சமாதான முயற்சி தடைப்பட்டிருப்பது தெரிந்ததே.

(ஐ)

## இந்தியாவில் 7 கோடி முதியோர்கள்

புதுடில்லி, ஜூன் 27

இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவில் 60 வயதைத் தாண்டிய முதியவர்களின் எண்ணிக்கை 7 கோடியாக மாறும். அவர்களில் பெரும்பான்மையோர் தங்களது பிள்ளைகளின் ஆதரவு இல்லாத நிலையில் அவதிப்படுவர்

இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். வயோதிபர்களுக்கென இயக்கிவரும் தொண்டர் நிறுவனம் ஒன்றின் இயக்குநர் எஸ். எஸ். சங்கே.

(ஐ-5)

## ஜெயலலிதா, சசிகலா நீதிமன்றத்தில் ஆஜர்

தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும், அவரது தோழி சசிகலா நடராஜனும் பல்வேறு ஊழல் வழக்குகள் தொடர்பாக சென்னையில் தனி நீதிமன்றங்களில் நேற்று முன்தினம் ஆஜரானார்கள்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்ததாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வழக்கில் செல்வி ஜெயலலிதா முதலாவது தனி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகைப் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

இதே வழக்கில் சசிகலா, வி.என். சுதாகரன், திருமதி சி. இளவரசி ஆகியோரும் இந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதி எஸ். சம்பந்தம் குற்றப்பத்திரிகையை வழங்கினார்.

ஆவணங்கள், வாக்குமூலங்கள், ஆதாரங்கள் உள்ளிட்ட சுமார் 15 ஆயிரம் பக்கங்களை இந்த குற்றப்பத்திரிகை கொண்டதாகும்.

(இ-5-3)

## விண்கலங்கள் மோதின

விண்வெளியில் இரண்டு விண்கலங்கள் மோதிக்கொண்ட சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நிகழ்ந்தது.

11 ஆண்டுகளாக விண்வெளியில் சோதனைக்காக வலம் வந்து கொண்டிருக்கும் ரஷ்ய விண்கலம் 'மிர்' இல் இருக்கும் விண்வெளி வீரர்களுக்கு சரக்குகளை ஏற்றிச் சென்ற 'புரஹிரஸ்' விண்கலம் 'மிர்' உடன் மோதியதில் அதன் பாதுகாப்புக்கவச உறையின் ஒருபகுதி உடைந்தது.

விண்வெளி வீரர்கள் உடனடியாக உடைந்த பகுதியை சரிபார்த்துவிட்டனர். 11 ஆண்டுகால விண்வெளிப் பயணத்துக்குப் பின்னர் 'மிர் சோதனைக்கலம் தற்போது வலுவிழந்த நிலையில் இருந்துவருவதாகக் கூறப்படுகின்றது.

(ஐ-5)

## ★ இந்தோனேசியப் படையினரிடம் சிக்கிய

# கிளர்ச்சிக் குழுத் தலைவர் கிழக்கு திமோரில் மரணம்!

ஜகார்த்தா, ஜூன் 27

இந்தோனேசியாவில் கிழக்குத் திமோர் பகுதியில் சுயாட்சி கோரிப் போராடும் கிளர்ச்சிக் குழு ஒன்றின் உயர் தளபதி டேவிற் அலெக்ஸிஸ் கொல்லப்பட்டிருப்பதாக இந்தோனேசிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கிழக்கு திமோர் எல்லையில் இந்தோனேசியப் படையினரின் திடீர் சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்ட அவர் ஹெலி மூலம் அழைத்து வரப்பட்டவேளை மரணமானதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்ட சமயம் இடம்பெற்ற சண்டையின் போது இவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

உலக அரங்கில்

கிழக்கு திமோரில் சுயாட்சி கோரிப் போராடும் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகப் பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை இந்தோனேசியப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தோனேசியாவில் அண்மையில் நடந்த தேர்தல் காலப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும், படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கும் காரணமாக இருந்த குழுவினரின் இரண்டாவது நிலையில் உள்ள தலைவரே தற்போது கொல்லப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தகவல் வெளியிட்டனர்.

(ஐ)

# பிலிப்பீன்ஸில் 100 பயணிகள் பணயக் கைதிகளா?

பிலிப்பீன்ஸின் தென்பகுதித் தீவான மின்ரனோவில் இரு பஸ் வண்டிகளில் சென்று கொண்டிருந்த சுமார் 100 பயணிகளை முஸ்லிம் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துள்ளதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிலிப்பீன்ஸ் அதிகாரிகள் வெளியிட்ட தகவல்களின் படி, பயணிகளை மீட்க முயன்ற அரச படையினருடன் நடந்த மோதலில் 4 முஸ்லிம் கெரில்லாக்கள் கொல்லப்பட்டதாகவும், இரு படையினர் உயிரிழந்ததாகவும் தெரியவருகிறது. பணயக் கைதிகளில் இருவர் பலியானதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

முஸ்லிம் தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்ட ஏனைய பணயக் கைதிகள் நிலை குறித்து முரண்பாடான தகவல்கள் வெளியாகியுள்ளன.

பணயக்கைதிகளில் பெரும்பாலானோரை படையினர் மீட்டுவிட்டதாக முதலில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் தீவிரவாதிகள் வசம் சிக்கிக் கொண்டிருப்பதாக பின்னர் வெளியான தகவல் தெரிவித்தது.

(ஐ)

## இந்தியா - அமெரிக்கா இடையே குற்றவாளிகளைப் பரிமாறும் ஒப்பந்தம் கைச்சாத்து

இந்தியாவும் அமெரிக்காவும் குற்றவாளிகளை விசாரணைக்காகத் தம்மிடையே பரிமாறிக் கொள்வதற்கான புதிய உடன்படிக்கையில் கைவெழுத்திட்டுள்ளன.

இதன்கீழ் ஓராண்டுக்கு மேல் தண்டிக்கத்தக்க குற்றம் இழைத்தவர்களையோ குற்றஞ் சாட்டப்பட்டவர்களையோ இந்தியாவும் அமெரிக்காவும் திருப்பியனுப்பவும் — வேண்டுகோளின்படி உடனடியாகக் குற்றவாளிகளைக் கைதுசெய்யவும் - இந்தப் புதிய உடன்படிக்கை வகை செய்யும்.

வாஷிங்டனில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் வெளியுறவு இணை அமைச்சர் சலீம் சர்வானியும், அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சர் ஸ்ரோக் சான்பட்டும் இந்த ஒப்பந்தத்தில் கைவெழுத்திட்டனர்.

(ஐ-5)

# பொல்பொட்டைக் கனடாவில் தடுத்து வைக்க அமெரிக்கா திட்டம்

வாஷிங்டன், ஜூன் 27

போட்டி 'கெமரூச்' கெரில்லாக்களிடம் பிடிபட்டுள்ள தலைவர் பொல்பொட்டை கனடாவுக்கு நாடு கடத்தி சர்வதேச விசாரணை மன்றம் ஒன்று அமைக்கப்படும் வரை அவரை அங்கே வைத்திருக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

பொல்பொட் தற்சமயம் காவலில் உள்ளார் என்பதை உறுதிப்படுத்தப்படும் வரை அமெரிக்கா காத்திருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொல்பொட் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கம்போடிய இணைப் பிரதமர்கள் அறிவித்துள்ள போதிலும் அவர் பிடிபட்டுள்ளார் என்பது ஊர்ஜிதப்படுத்தப்படுவதை தாம் எதிர்பார்த்திருப்பதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மனித குலத்துக்கு எதிராக பொல்பொட் புரிந்த குற்றச் செயல்களுக்காக அவரை சர்வதேச நீதிமன்றம் ஒன்றில் விசாரணை செய்ய வசதியாக கம்போடியாவில் இருந்து அவரை நாடுகடத்த கனடா உதவ வேண்டும் என்று அமெரிக்கா கேட்டிருக்கிறது.

இனக்கொலைக்கு எதிரான கனடிய சட்டத்தின் கீழ் பொல்பொட்டை கம்போடியாவில் இருந்து நாடு கடத்த உதவுமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மடலின் ஆல்பிறைற் கனடா வெளியுறவு அமைச்சர் லொயிட் அக்ஸ்வேர்தியிடம் கோரியுள்ளார்.

இத்தகைய உதவியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய தான சட்டங்களைக் கொண்ட நாடுகளாக கனடாவும், டென்மார்க்கும் மட்டுமே உள்ளன.

எனினும் இது ஒரு சிக்கலான விவகாரமாகவே உள்ளது.

(ஐ)

## ஆயுதங்களைக் கைவிட்டாலே அஸாம் தீவிரவாதிகளுடன் பேச்சு

### பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

அஸாம் மாநில தீவிரவாதிகள் தங்கள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே அவர்களுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் முலாயம் சிங் யாதவ் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அஸாம் மாநிலத் தலைநகர் கௌஹாத்திக்கு விஜயம் மேற்கொண்ட அவர் அங்கு செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசினார்.

தடை செய்யப்பட்டுள்ள அஸாம் ஐக்கிய விடுதலை முன்னணி தீவிரவாதிகள் தமது வன்செயல்களை முடிவுக்குக் கொண்டு வந்தால் மட்டுமே புதுடில்லி அவர்களுடனான பேச்சு பற்றி கவனத்தில் எடுக்கும்.

பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறந்தே உள்ளன. தீவிரவாதிகள் தமது நடவடிக்கைகளைக் கைவிட்டால் இராணுவமும் தனது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளும் என்று அவர் அங்கு தெரிவித்தார் (ஐ)

## 62 நாடுகள் ஒப்புதல்

நிலக்கண்ணி வெடிகளை இந்தப் பூமியிலிருந்து முற்றாகஒழிப்பதற்குவகை செய்யும் பிரசெல்ஸ் நகர பகிரங்க அறிக்கையில் இதுவரை 62 நாடுகள் கையொழுத்திட்டன. 13 நாடுகள் கையெழுத்திடுவதாகத் அறிவித்துள்ளன.

பிரசெல்ஸில் நடைபெறுகின்ற சர்வதேச மாநாடுகளின் மாநாட்டில் தயாராகி வரும் இவ்வறிக்கை இவ்வாண்டு இறுதியில் கனடாவில் முழு ஒப்பந்தமாக வடிவம் பெறும்.

உலகிலேயே மிக அதிகமாக நிலவெடிகளைஉற்பத்தி செய்கின்ற சீனாவும் ரஷ்யாவும் மாநாட்டில் கலந்து கொள்ள வில்லை.

## கைதிகள் இடம் மாற்றம்

சென்னை, ஜூன் 27

தமிழ் நாட்டில் வேலூர் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் 68 விடுதலைப் புலிகளையும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டு வருவதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் அனைவரையும் ஒரே இடத்தில் வைத்திருப்பது பாதுகாப்புக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்தலாம் என்பதாலேயே இவர்கள் இடம் மாற்றப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் யாழ். மாணவருக்கு நிதி உதவி

திருநெல்வேலி, ஜூன் 27

சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண விஜய நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு கொழும்பிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் ஊடாக யாழ். மாவட்டத்தில் ஜி. சீ. ஈ. உயர்தரவகுப்பில் கற்கும் 10 மாணவர்களுக்கு உதவி நன்கொடை நிதி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட இந்த 10 மாணவர்களுக்கும் இந்த நிதி தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் அவர்களால் இதற்கென ஆரம்பிக்கப்படும் வங்கிக் கணக்குப்புத்தகத்தில் வைப்பிலிடப்பட்டு வழங்கப்படவிருப்பதாக திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் இயக்குநர் திரு. ராஜமகேந்திரசிங்கம் தெரிவித்தார்.

இந்த உதவி நன்கொடையைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் விவரம் பின்வருமாறு:-

★ செல்வி சங்கீதா சிவலிங்கம் — யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

★ செல்வி தமிழ்ச் செல்வி நடராசா — யாழ். இந்து மகளிர் கல்லூரி.

★ செல்வி மேகலா சிவராசா — யாழ். இந்து மகளிர் கல்லூரி.

★ செல்வி குமரேஸ்வரி ஜெயரத்தினம் — யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

★ தவராசசிங்கம் சதீஸ்குமார் — சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி.

★ கனகராஜர் கஜனேசன் — வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.

★ ரா. ரவிராஜ் — யாழ் இந்துக் கல்லூரி.

★ செல்வி சிவபாதசுந்தரம் அபர்ணா — யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

★ செல்வி அபிராமி சரவணபவன் — கொக்குவில் இந்துக் கல்லூரி.

செல்வி பொன்னுத்துரை தாரணி — யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி. (ஐ-135)

# வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உணவுப்பொருள்கள் பற்றாக்குறை

## பொதுமக்கள் பெரும் பாதிப்பு

செம்பியன்பற்று ஜூன் 27

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உணவுப் பொருள் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. மணற்காடு தொடக்கம் செம்பியன்பற்று வரையிலான பரந்த பிரதேசத்தில் மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைத் தாராளமாகப் பெறமுடியவில்லை.

இப்பகுதியில் உள்ள மக்கள் தமது அன்றாட உணவுத் தேவைக்காக பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

இப்பகுதிக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வது இராணுவத்தினரால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கூடியது 3கிலோ அரிசி, 3 கிலோ மா என்பவற்றை மட்டுமே எடுத்துச் செல்ல மக்கள் அனுமதிக்கப்படுகின்றனர், இவைதவிர சைக்கிள் ரயர் ரியூப் வகைகள், பற்றரி வகைகள், எரிபொருள் வகைகள் என்பவற்றை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

மணற்காட்டுக்கு அப்பால் பருத்தித்துறைமற்றும் வெளி இடங்களுக்குச் செல்ல இளவயதினர் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை.

இதனால் மாணவர்கள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

தாம் அன்றாடம் பிடிக்கும் மீன் வகைகளைச் சந்தைப்படுத்த முடியாமல் இப்பகுதி மக்கள் அவதிப்படுகின்றனர்.

இதே வேளை —

செம்பியன்பற்றில் இருந்து மந்திகை வரை இடம்பெற்று வந்த பஸ் சேவையும் கடந்த பல வாரங்களாக இடை நிறுத்தப்பட்டிருக்கிறது. (ஐ- 36)

# மேட்டு நிலப் பகுதிகளுக்கு தனியான விவசாய சம்மேளனங்கள்

திருநெல்வேலி, ஜூன் 27

நல்லூர் கமநலச்சேவை கேந்திர நிலையப்பகுதியில் மேட்டுக்காணிகள் உள்ள பகுதிகளுக்கு என ஐந்து விவசாய சம்மேளனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ். பிரதேச செயலர் பிரிவைச்சேர்ந்த கொழும்புத்துறை, ஈச்சமோட்டை, வண்ணார்பண்ணை ஆகிய இடங்களுக்கான விவசாய சம்மேளனம் விரைவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளதாக பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி பாமா கந்தப்பு தெரிவித்தார்.

விவசாயிகளுக்கான உள்ளீடுகள் மற்றும் உதவிகள் யாவும் விவசாய சம்மேளனங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளதால் சகல விவசாயிகளும் இதில் அங்கத்துவம் பெற வேண்டியது முக்கியமானது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-135)

# சுதந்திர தினப் பொன்விழா ஏற்பாட்டுக் குழு அமைப்பு

## மண்டேலாவை அழைக்க முடிவு

கொழும்பு, ஜூன் 27

அடுத்த ஆண்டு கொண்டாடப்படவுள்ள இலங்கையின் சுதந்திரதின பொன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ள தென்னாபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவை அழைப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

சுதந்திர தின பொன்விழா ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக கடந்த திங்களன்று அலரிமாளிகையில் ஜனாதிபதி தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக் கூட்டத்திலேயே ஜனாதிபதி அரசின் இந்த முடிவை அறிவித்தார்.

சுதந்திரதின பொன் விழாவின் ஏற்பாடுகளைக் கவனிக்க ஏற்பாட்டுக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதி தலைமையிலான இந்தக் குழுவில் அமைச்சர்கள் லக்ஷ்மன் கதிர்காமர், லக்ஷ்மன் ஜெயக்கொடி இந்திக குணவர்த்தன, ரத்னசிறி விக்கிரமநாயக்கா, டி. எம். ஜெயரட்ணா, மங்கள சமரவீர, சீ. வி. குணவர்த்தன ஆகியோருடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

சுதந்திரதின பொன்விழாவின் பிரதான வைபவம் கண்டியில் நடைபெறவுள்ளது. (ஐ)

# மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 27

பலாலி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலைகளின் ஒன்றிணைந்த வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக் கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மைதானத்தில் நடைபெறும். பிரதம விருந்தினராக பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் சோ. பத்மநாதன் கலந்து கொள்வார். (ஐ - 4)


## பெயர் மாற்றம்

வேலணை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் என்று அழைக்கப்பட்டு வந்த எமது சங்கம் 10 - 06 - 97 தொடக்கம்

வேலணை பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை இத்தால் தெரியப்படுத்துகின்றோம்.

சு. சிவனேசன், தலைவர்
பொ. பூபாலபிள்ளை, செயலாளர்

(48044)

## லலிதா திருமண சேவை

என்னிடம் மணமகனுக்குரிய ஜாதகங்கள் உண்டு. வெளிநாட்டிலோ, உள் நாட்டிலோ பொருத்தமான மணமக்களைத் (பெண்கள் 67 ஆம் ஆண்டுக்கு பிறப்பட்டவர்கள்) தேர்ந்தெடுப்பதற்கு 25-06-97 தொடக்கம் 2-07-97 வரை தொடர்பு கொள்ளலாம்.

நாகலிங்கம் கந்தையா
லலிதா திருமணசேவை
மூத்த நயினார் கோயில் வடக்கு வீதி,
ஆனைக்கோட்டை. (47292)

## ACCOUNTING

திரு. பாலவாசன்
A/L 99
தனிவியாபார
முடிவுக் க/கு
28. 06, 97 சனிக்கிழமை
7.00 - 8.00 A.M
SHAMROCK
(48033)

## யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
வருடாந்த பொதுக் கூட்டம்

காலம்: 19 - 07 - 97 சனிக்கிழமை
காலை 10. 30 மணி

இடம்: பாடசாலை மண்டபம்.

தலைமை: அருட்செல்வி G. செல்வராணி A. C
அதிபர்

நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. நிர்வாக அறிக்கை
4. பொதுக் கூட்ட அறிக்கை
5. கணக்கறிக்கை
6. புதிய உறுப்பினர் தெரிவு

இதில் அனைவரையும் பங்கு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

க. தேவராஜா
செயலாளர்

(48042)

## திருமறைக் கலாமன்றம்
Centre for Performing Arts

## கருத்தரங்கு

பொருள்: குற்ற பழி உணர்வில்
Guilty Complex

வழங்குவோர்:
அருட்திரு S.J. இராஜநாயகம்
(இயக்குநர், ''அகவொளி'' நிலையம்)
திரு. கு.வி. கந்தவேள்
(அரச அதிகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளர்)

நாள்: 28-06-1997 சனிக்கிழமை
இலங்கை நேரம் மாலை 4.30 மணி

இடம்: மன்றக் கேட்போர் கூடம்

ஆர்வலர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

திருமறைக் கலாமன்றம்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (சி/1011)

## கலைமகள்

கல்வி நிலையம்
அம்மன் கோயிலடி
மீசாலை
A/L 99
பொருளியல்
புவியியல்
திரு. நித்தி
ஆரம்பம்: 28 - 06 - 97
சனி பி. ப. 3-00 மணி
-நிர்வாகி
(47997)

## வெளிவந்துள்ளது!

கணிதம்
ஆண்டு 4

1996 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்துக்கான 20 கணித எண்ணக் கருக்களையும் நோக்கங்களாகக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது.

வெளியீடு:
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
(சி/1002)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட
முதலாம் ஆண்டு மாணவியான
செல்வி ச. ஜெயகுமாரியின் தந்தை

தாமு சங்கரப்பிள்ளை

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

விஞ்ஞான பீட 95, 96 ஆம்
கல்வியாண்டு மாணவர்கள்,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். (48043)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சாரம்

## பாலர் விளையாட்டு விழாக்கள்

கோண்டாவில், ஜூன் 27

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் கீழ் நாவலர் வீதியில் உள்ள ஞானக்குழந்தை முன்பள்ளிக் கல்வி நிலையத்தின் 5 ஆவது விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் நடைபெறும். (ஐ-71)

★ ★ ★

யாழ். பாலர் கல்விக் கழகத்தின் கீழ் திருநெல்வேலி சிவன் வீதியில் இயங்கும் ஞானக்குழந்தை முன்பள்ளி நிலையத்தின் 5ஆவது ஆண்டு விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை காலை 8. 30 மணிமுதல் சிவன் வீதியில் உள்ள மைதானத்தில் நடைபெறும். (ஐ-71)

## வீதி திருத்தம்

கோண்டாவில், ஜூன் 27

கே. கே. எஸ். வீதியையும் பலாலி வீதியையும் இணைக்கும் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு முன்பாகச் செல்லும் வீதி தற்போது செப்பனிடப்பட்டு வருகிறது. (ஐ-71)

## அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

அண்மையில் காலமான முன்னாள் ஓய்வு பெற்ற அதிபரும், சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் பணிப்பாளருமான கி. தாமோதரம் பிள்ளையின் நினைவு அஞ்சலிக் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3, 30 மணிக்கு வட்டுக்கோட்டை வடக்கு அமெரிக்கன்மிசன் பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஐ)

## குருளை சாரணர் அறிமுகப் பயிற்சி

கோண்டாவில், ஜூன் 27

யாழ். மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் பயிற்சிக் குழுவினரால் நடத்தப்படும் குருளைச் சாரணத் தலைவர்களின் அறிமுகப்பயிற்சி எதிர்வரும் ஞாயிறு, திங்கட் கிழமைகளில் கொக்குவில். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஐ-71)

## கிரனேட் வெடித்து சிப்பாய் பலி

கொழும்பு, ஜூன் 27

தலையணைக்கு கீழே கைக்குண்டு ஒன்றை வைத்துக் கொண்டு உறங்கிய இராணுவச் சிப்பாய் ஒருவர் அது தற்செயலாக வெடித்ததில் பலியானார்.

வெலிமடை திக்கபிட்டிய என்ற இடத்தைச் சேர்ந்த ரி. எம். செனவிரத்தினா (வயது27) என்பவரே இறந்தவராவார். (ஐ)

## பரிசளிப்பு விழா

வடமராட்சி, ஜூன் 27

புலோலி பற்றனை மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். கல்விவலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் எஸ். சிவராஜா பிரதமவிருந்தினராகவும், பருத்தித்துறை கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி. ரி. செல்வரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

அதிபர் திருமதி எஸ். இந்திரராஜா தலைமையில் இவ்விழா நடைபெறும். (ஐ-173)

## கிராம அலுவலர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். மாவட்ட கிராம சேவை அலுவலர் சங்கமும், தமிழ் பேசும் கிராமசேவை அலுவலர் சங்கமும் இணைந்து புதிய சங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 00 மணிக்கு யாழ். பிரதேச செயலக கேட்போர் மண்டபத்தில் நடைபெற உள்ளது. (ஐ-5)

## தமிழ்த்தின விழா

குருநகர், ஜூன் 27

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் தமிழ்மன்றம் நடத்தும் தமிழ்த்தினவிழா எதிர்வரும் திங்கள் காலை 9. 30 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் செல்வன் அ. அனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

நல்லூர் கல்விக் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆர். அருளானந்தம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ-51)

## விதவைகளுக்கு கடன் உதவி

குருநகர், ஜூன் 27

குருநகர்ப்பகுதியில் உள்ள ஐம்பது வயதுக்குட்பட்ட விதவைகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்புக் கடனாக 5 ஆயிரம் ரூபாவை சுழற்சி முறையில் வழங்க குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடன் வழங்குவது தொடர்பான படிவங்கள் குருநகரிலுள்ள விதவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ஐ-51)

## கல்வி கண்காட்சி

சாவகச்சேரி. ஜூன் 27

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி இன்றும், நாளையும் பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு. சிவானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கோட்டக் கல்வி அலுவலர் சி. கணேசன் கலந்து கொள்வார். (ஐ-31)

## அதிபர்கள் கூட்டம்

குருநகர், ஜூன் 27

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப்பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலயத்திலும் — நல்லூர் கல்விக்கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் மறுநாள் செவ்வாய்க்கிழமை யாழ். இந்துமகளிர் கல்லூரியிலும் நடைபெற உள்ளன.

இரு தினங்களிலும் காலை 10.00 மணி முதல் ஆரம்பமாகி நடைபெற உள்ள கூட்டங்களில் பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட இருப்பதனால் அதிபர்களை தவறாது சமுகமளிக்குமாறு யாழ். நல்லூர்க் கல்விக் கோட்டங்களின் பிரதிக்கல்விப்பணிப்பாளர்வ.தானையா கேட்டுள்ளார். (ஐ-51)

## கசிப்புடன் அறுவர் கைது

வடமராட்சி, ஜூன் 27

பருத்தித்துறை நகரில் கசிப்பு வைத்திருந்த அறுவர் பொலீசாரினால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஆறு பேரும் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை [illegible] சார் இவர்களை [illegible]தனர். (ஐ-173)

## தமிழ் விழா

யாழ். கன்னியர்மடம் மகாவித்தியாலயத்தின் தமிழ் விழா இன்று வெள்ளி மு.ப 9.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

யாழ். கல்வி வலயம் — 1 பிரதிக்கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் முதன்மை விருந்தினராகவும், யாழ் திருக்குடும்ப கன்னியர் சபையின் மாகாணத்தலைவி அருட்சகோதரி மேரி சோபியா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ள உள்ளார்கள். (ஐ-51)

## இடமாற்றம்

வலிகாமம் தெற்கு, ஜூன்27

சங்கானைக் கல்விப் கோட்டத்தில் உதவிக்கல்விக் பணிப்பாளராகக் கடமையாற்றிவரும் அ. தற்பரானந்தம் உடுவில் கல்விக் கோட்டத்துக்கு உதவிக் கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஐ-152)

## வாக்காளர் படிவங்கள்

தேர்தல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்ட வாக்காளர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இப் படிவங்கள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், வாக்காளர்களாகப் பதிவு செய்யவுள்ள 18 வயதுக்கு மேற்பட்டோர் தத்தமது பகுதி கிராம அலுவலகரிடம் உரிய படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து வாங்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## அறநெறிப் பாடசாலை

சாவகச்சேரி, ஜூன் 27

சாவகச்சேரி - பெரியமாவடி - வித்தகம் விநாயகர் மடாலயத்தில் அண்மையில் அறநெறிப் பாடசாலையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் பு சுந்தரம்பிள்ளை பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்.

## பண்டிதமணி பிறந்த நாள் வைபவம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் 98 ஆவது பிறந்ததின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு திருநெல்வேலி பலாலி ஆசிரிய கலா சாலையில் கொண்டாடப்படவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச முனிவர் ஞாபகார்த்தசபை தலைவர் ஆ மகாலிங்கம் தொடக்க உரையாற்றுவார்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைத்தலைவர் பண்டிதைபொன். பாக்கியம், அரசகரும மொழித்திணைக்களத்தின் முன்னைநாள் பிரதி ஆணையாளர் 'பிள்ளைக்கவி' வ. சிவராசசிங்கம், முத்தமிழ் வெளியீட்டுக் கழக செயலாளர் வித்துவான் க. சொக்கலிங்கம் ஆகியோரும் இவ் விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் [illegible] நிகழ்த்துவார். (ஐ-5)

# கட்சி உறுப்பினருக்கு ரணில் எச்சரிக்கை

ஐ தே.கவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் எவராவது கட்சி உள் விவகாரங்கள் தொடர்பாக பத்திரிகைகளுக்கு தகவல் கொடுத்தால் அவர்களுக்கு மன்னிப்பே கிடையாது.

இப்படி ஐ தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

ஐ.தே.கவின் நாடாளுமன்றக் குழு செவ்வாயன்று அவசரமாகக் கூட்டப்பட்ட சமயம் அதில் பேசுகையிலேயே அவர் இப்படி எச்சரித்தார்.

''ஐ.தே.க.தேசிய பட்டியல் எம். பியான சரத் கொங்கஹகே ஜனாதிபதி மீது குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டுவர வேண்டும் என்பது குறித்து என்னுடன் பேசினார்.

அந்தப் பேச்சு குறித்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்தது

இப்படி கட்சியின் உள்விடயங்கள் பத்திரிகைகளுக்குச் செல்வதை அனுமதிக்க முடியாது''

இப்படி ரணில் மேலும் கூறினார். (இ-3-150)

# ஓர் அங்கத்தவர் குடும்பங்களின் உணவு முத்திரை வரவில்லை

நீர்வேலி ப்ல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் 43 'ஏ', 'பி' ஆகிய மீளக்குடியமர்ந்தோர் நிவாரண முத்திரைகளுக்கான பொருள் விநியோகம் தற்போது நடைபெறுகிறது. எனினும், ஓர் அங்கத்தவர் குடும்பங்களுக்கு இது இன்னும் வழங்க ஆரம்பிக்கப் படவில்லை

இவர்களுக்குரிய பட்டியல் சங்கக் கிளைகளுக்கு இன்னும் வந்து சேராமையே இதற்குக் காரணமாகும்.

ஓர் அங்கத்தவர் உள்ள குடும்பங்களுக்கு முத்திரைகள் இம்முறை வராமையால் கிராம உத்தியோகத்தர்களின் பட்டியலின் அடிப்படையிலேயே பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-152)

# மதக் கட்டுப்பாடுகள் பொது நன்மை கருதியவையே

காஞ்சி காம கோடி பீடாதிபதியாக விளங்கிய ஜகத்குரு ஸ்ரீ சங்கராச் சாரியாரியாரின் (பெரியவரின்) கருத்துக்களில் சில இங்கு கேள்வி பதில் வடிவத்தில் தொகுக்கப் பட்டுள்ளன.

தொகுப்பு:

மட்டுவில் சி.சதாசிவம்

**கேள்வி:** பெரிய பெரிய இலட்சியங்களுக்காகப் போராடுபவர்கள் சிறிய சிறிய தவறுகள் விடலாமா?

பதில்: நல்ல பயனுக்காகச் செய்யும் கெட்ட காரியத்திற்குப் பிராயச் சித்தம் செய்து கொள்ளலாம்.

நேர்வழியை விட்டுக் குறுக்கு வழியில் ஒவ்வொரு காரியத்தைச் செய்ய ஒவ்வொரு சமயத்தில் வந்து விடுகிறது. அப்படிச் செய்து விட்டால் பின்னர் பிராயச் சித்தம்செய்து கொள்ளலாம். இதை ஆங்கிலத்தில் "நெஸ்ஸசெறி எவில்" (Necessary Evil) என்று கூறுவார்கள்.

ஒரு குற்றமும் செய்யாமல் நாட்டிற்கு ஊருக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக சிறுசிறு தவறுகள் செய்கிறோம் சில பொய்கள் பேசுகிறோம். அதற்காகச் சில சமயம் மறியலில் போட்டு விடுகிறார்கள். ஒரு குழந்தை சேற்றில் விழுந்து விடுகிறது. உடனே அம்மா சேற்றில் இறங்கிக் குழந்தையை எடுத்து இரட்சிக்கிறாள். வேண்டுமென்று தானே சேற்றில் இறங்கினாள். பின் எதற்காகச் சேற்றைக் கழுவிக் கொள்கிறாள் என்று கேட்கலாமா? ஏதோ இறங்கும் படியான சந்தர்ப்பம் வந்துவிட்டது. காரியம் முடிந்ததும் கழுவிக் கொள்கிறாள். இங்கு நோக்கம் தான் முக்கியம்.

கேள்வி: நல்ல தாய்க்கும் நல்ல தகப்பனுக்கும் ஒரு கெட்ட பிள்ளை ஏன் பிறக்கிறது?

பதில்: இது புனர் ஜென்ம பாப புண்ணியங்களுக்கு ஏற்பவே புனர் ஜென்ம ஆன்மா அமைகிறது. அந்தத் தாயாரின் தாய் தகப்பன், தகப்பனாரின் தாய்தகப்பன், அவர்களுக்கு முன்னோர் செய்த வினைப்பயன் அந்தப் பிள்ளையுடைய ஆன்மாவுடன் இரண்டறக் கலந்திருக்கும். (இதனை Recarnation என்று சொல்வார்கள்) எனவே, நான் ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யவில்லையே, நான் நன்றாகத் தானே பாடுபடுகின்றேன்; பயன் ஏன் எதிராக இருக்கிறது என்றெல்லாம் இடையிடையே தளரக் கூடாது.

கேள்வி: மதமாற்றம் பற்றி என்ன எண்ணுகிறீர்கள்?

பதில்: மதமாற்றம் செய்பவர்களை நாம் வெறுக்க வேண்டியதில்லை. ஆனால் மூட நம்பிக்கையற்ற, வெளிவேடமற்ற, இரக்கமுள்ள சுயநலமற்ற, ஒழுக்கமுள்ள வகையில் இது அமைய வேண்டும். ஈடு செய்தலோ அன்றிப் பேரம் பேசுதலோ இருக்கக் கூடாது.

கேள்வி: வரதட்சணை பற்றி...?

பதில்: வேண்டவே வேண்டாம். தர்மத்தைச்சிதைக்கும் பழக்கம் இது. எப்படியாவது

## ஞானக்கதிர்

நிற்க வேண்டும். கல்யாணத்தில் பணத்தை விரயம் பண்ணுகிற இந்தக் கூத்து உடன் நிற்க வேண்டும். சாஸ்திரங்கள் பெண்ணை உயர்த்தியே வைத்திருக்கின்றன.

கேள்வி: வேதம் பற்றி...

பதில்: வேதமும் தமிழும் பண்டைத்தமிழரால் மரபாக ஏற்றுக் கொள்ளப்பட்டவையே. வேதங்களைச் சரியாக ஓதாவிட்டால் நன்மைக்குப் பதில் தீமையே வரும். தமிழில் வேதம் மறை என்றும் எழுதாக் கிளவி என்றும் குறிப்பிடப்படுகின்றது.

கேள்வி: உணவு பற்றி...

பதில்: இதை மிகவும் எளிமையாக ஆக்கிக் கொள்ள வேண்டும். முதலில் நாவின் சுவையுணர்வைக் கட்டுப் படுத்தினால் படிப்படியாக எல்லா உணவுகளையும் தட்டுப்படுத்தி மனதை நல்ல இலட்சியங்களிலே செலுத்தலாம்.

கேள்வி: மதக் கட்டுப்பாடுகள் பற்றி ..?

பதில்: எந்தமதத்திலும் கட்டுப்பாடுகள் சில பொது நன்மைகள் கருதியே ஏற்படுகின்றன. ஆயினும் கட்டுப்பாடுகளுக்கு ஒரு கட்டுப்பாடு வேண்டும். எதையும் தாமாகவே விரும்பிச் செய்ய வேண்டும் நிர்ப்பந்தத்துக்காகச் செய்யக் கூடாது. (Laws should be observed inde pendently)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுத்தளபாடங்கள், குளிர்சாதனப்பெட்டி, T.V, கடைக்குரிய அலுமாரி, சோக்கேஸ், விறாக்கிகள் இன்னும் பல. உடன் தொடர்பு: 07, கைலாச பிள்ளையார் கோயில் பின் வீதி, நல்லூர். [47999]

வீட்டுத்தளபாடங்கள். மின்மோட்டார் உடனடியாக விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: ஞாயிறு மு.ப 7.00 பி.ப 6.00 மணி. தொடர்பு: 24, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். [48010]

### திருமண சேவை

சகல மதம், உத்தியோகம், தொழில்சார் (வெளிநாடுகள் உட்பட) மணமக்களதுகுறிப்புகளையும், தகவல்களையும் ''சேவை நம்பகம்'' விவாக சேவையில் ஒருங்கிணைப்பது பொருத்தமான விரைவான திருமணங்களுக்கான வழியாகின்றது. 51, வைமன் வீதி, நல்லூர். [48030]

### அறை வாடகைக்கு

யாழ். நகரில் அறை வாடகைக்குண்டு. (நகைத்தொழில் செய்பவர்களுக்கு உகந்தது) ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். ]48017]

### மணமகன் தேவை

இந்து, குருகுலம் 42 வயதுடைய அழகிய இளந்தோற்ற மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. ''சேவை நம்பகம்'' விவாக சேவை, 51, வைமன் வீதி, நல்லூர். [48031]

---

## A|L-99

(கலை-வர்த்தகம்)
பிரிவு II
ஆரம்பம்: 28-06-97
(8-00 மணி)

## புதிய உயர்கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்.
(48035)

---

# 41 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் கந்தையா மாசிலாமணி

(7 ஆம் வட்டாரம், நயினாதீவு)

மலர்வு: 19 – 07 – 1931
உதிர்வு: 18 – 05 – 1997

அன்னாரின் 41 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 27-06-97 இன்று வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு நயினாதீவு தீர்த்தக் கரையில் நடைபெறும்.

அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

துணைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
சுற்றத்தினர்.

''சோதியகம்,''
7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
சி. சிவகுமார்,
68, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(48018)

---

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 12 — 02 — 1942



உதிர்வு: 31 — 03 — 1997

## அமரர் நல்லதம்பி சுப்பிரமணியம்

(இ. போ. ச. ஊழியர்)

அன்புக்கு இனிய கணவராய், பாசம் நிறைந்த நற்தந்தையாய், பரிவு காட்டும் சித்தப்பாவாய், நேசமுள்ள மகனாய், பொறுமையுள்ள சகோதரனாய் எங்கள் உள்ளங்களில் நிறைந்து நின்ற அன்புத் தெய்வமே! யம தூதன் வந்தானே உனைக்கவர.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வீரபத்திரப் பெருமான் அருள் வேண்டி நிற்போம்.

நின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு.

(47290)

---

ஸ்ரீ முனீஸ்வரன் துணை

# யாழ். கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தான அறிவித்தல்

தேவஸ்தான மணவாளக் கோல அபிஷேகவிழா எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி தொடங்க உள்ளது என்பதை உபயகாரர்களுக்கும் அடியார்களுக்கும் அறியத்தருகிறோம்.

ம. ஞானசேகரம்
பூசகரும் பரிபாலகரும்

(48028)

---

## G. A. Q. யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி)

★ மேற்கூறப்பட்ட கற்கை நெறிக்கான பதிவுகளுக்கு யாழ். பல்கலைக் கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
★ இதற்கான விண்ணப்ப முடிவு திகதி: 31-07-97
★ இதற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

## Ist in Com. ( 98 )

விரிவுரைகள் ஆரம்பம்: 05 - 07 - 97

## B. A. Part I

புதிய பிரிவு ஆரம்பம்: 05 - 07 - 97

விவரங்களுக்கு:
S. அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம்சந்தி, யாழ்.
(48034)

---

# கேள்வி அறிவித்தல்

## பிரதம பொறியியலாளர் அலுவலகம், நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(1) மேற்படி திணைக்களத்தினால் கீழே தரப்பட்டுள்ள வேலைகளுக்குரிய கேள்விகள் யாழ்ப்பாணம், நிர்மாணத்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலக கேள்விச்சபைத் தலைவரினால் 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதி முற்பகல் 10-30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் இக் காரியாலயத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

(2) நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) கட்டடம் நிர்மாணிப்பதற்குத் தரம் எம் 9 இலும் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கேள்விப்பத்திரம் கோருவதற்கு தகுதியுடையோராவர்.

(3) ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்களடங்கிய பதிவுப் புத்தகத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) கேள்விப் பத்திரத்தினை யாழ்ப்பாணம், றக்கா வீதியில் அமைந்துள்ள நிர்மாணத்திணைக்கள நிறைவேற்று எந்திரி அலுவலகத்தில் 1997 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9 ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணத்தைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் |
|---|---|
| கோப்பாய் வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல். | 500/- |
| வட்டுக்கோட்டை வைத்தியசாலையில் பற்சிகிச்சை நிலையம் நிர்மாணித்தல். | 500/- |
| உசன் கிராமோதய சுகாதார நிலைய மிகுதி வேலை | 500/- |
| ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் மலசல கூட திருத்த வேலை | 100/- |

(5) கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கலாம். அத்துடன் ஏதும் மேலதிக விவரங்களை யாழ்ப்பாணம், றக்கா வீதியில் அமைந்துள்ள நிர்மாணத் திணைக்கள, நிறைவேற்று எந்திரியிடமிருந்து வேலை நாள்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி ந. சுந்தரமூர்த்தி,
பிரதம பொறியியலாளர் (நிர்மாணம்),
யாழ்ப்பாணம்.

நிர்மாணத் திணைக்களம்,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
25. 06. 1997

(கி-1006)

---

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.

# கேள்வி அறிவித்தல்

சுன்னாகம் சந்தையிலுள்ள மாட்டிறைச்சிக் கடை, ஆட்டிறைச்சிக் கடைகளை 15-07-1997 தொடக்கம் 31-12-1997 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 10-07-1997 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

விவரம் வருமாறு:
**கேள்விப் படிவம் வழங்குதல்: 09-07-1997 நண்பகல் 12.00 மணி வரை.**
**கேள்வி திறக்கப்படும் நேரம்: 10-07-1997 நண்பகல் 12.00 மணி.**

| | கேள்விப் படிவம் | கேள்வி வைப்புப்பணம் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1. சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை | 100/- | 2,000/- | 60,000/- |
| 2. சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 1,000/- | 15,000/- |

மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
25-06-1997

(சி/1008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பென்னம் பெரிய கேள்வி இது!

புதியதொரு தேர்தல் முறையை அரசாங்கம் இன்னும் பத்து நாள்களில் அறிவிக்கும் என்று அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் அறிவித்திருக்கிறார்.

ஆண்டுக்கோர் அரசமைப்புச் சட்டம் போலவே, இலங்கையில் தேர்தல் முறைகளும் அடிக்கடி மாறுகின்றன; அரசியல் கட்சிகளின் வெற்றி வாய்ப்பை இலக்காகக் கொண்டுமோற்றப்படுகின்றன.

தேர்தல் முறை மாறுவதால் அரசியல்வாதிகளுக்கே நன்மை தீமைகள் கிடைக்கின்றன. அதனால் அந்த மாற்றங்கள் குறித்து விசேடமாக அக்கறைப்படுவோர் அரசியல்வாதிகளாகவே இருப்பர். மக்களுக்கு இது குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்ள ஏதுமில்லை; எதுவும் இல்லை.

மக்கள்— தமிழர்கள் மட்டுமன்றிச் சிங்கள மக்களும் கூட — இனப்பிரச்சினைக்குதான் அறிவித்தது போன்று அரசு ஒரு தீர்வைக்கொண்டு வருமா என்பதிலேயே ஆவலாக உள்ளனர்; அதற்காகக் காத்திருக்கின்றனர். அரசபடைகள், போராளிகள், பொதுமக்கள் என்ற முத்தரப்பினரின் உயிரழிவுகளுக்கு அரசு முற்றுப்புள்ளி வைக்கமாட்டாதா? நாடு பல வழிகளாலும் அழிந்து போகத் துணை போகும் போர் எப்போது நிறுத்தப்படும்? என்பனவே மக்கள் பதில் அறியத் துடிக்கும் விடயங்கள்.

அதிகாரப் பரவலாக்கல் திட்டம் எப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பதனையே மக்கள் எதிர் பார்த்திருக்கிறார்கள். அது தொடர்பாக விசேடமாகவும் அவசரமாகவும் கவனத்தைச் செலுத்தி உருப்படியாக உழைக்க வேண்டிய அமைச்சர். தேர்தல் முறை மாற்றத்தை வைத்துச் 'சூ'க் காட்டுகிறார்.

அதிகாரப்பரவல் முறை குறித்து சட்ட நகல் அதோ அந்த மாதத்தில் வருகிறது; இதோ இந்த மாதத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்; என்று மாதங்களை நீட்டிவந்தவர் பேராசிரியர்; வரவு செலவுத்திட்டம் எதிர்வரும் நவம்பரில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அதனை தவறாமல்சமர்ப்பிப்பேன் என்று ஆகக் கடைசியாகக் கூறினார்.

ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகள் நடைபெறும் வேகத்தையும், மிகச் சிக்கலான முக்கிய விடயங்கள் ஆராயப்பட வேண்டிய இக்கட்டான நிலையையும்பார்த்தால், இவ்வருடத்தில் அதிகாரப்பரவல் நகல் சட்டம் நாடாளுமன்றத்துக்கு வராது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு தேவை ஏற்படும் பட்சத்தில் மட்டுமே கூடும் என்று காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை கொண்டு வருவதில் அரசுக்கும்ஏனைய கட்சிகளுக்கும் உள்ள அக்கறை இவ்வளவு தான்.

இந்த லட்சணத்தில், இந்த வருடம் கடிதெனக் கழிந்தாலும் அரசின் பதவிக்காலம் முடியும் 2,000 ஆம் ஆண்டிலும் இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டம் உருப்பெறுமா? என்ற பென்னம் பெரிய கேள்வி எழுகிறது.

# மனித உரிமைகள் பணியகத்தின் செயற்பாடு மாத இறுதியில் நிறுத்தம்

கொழும்பு, ஜூன் 27

மனித உரிமைகள் பணியகத்தின் செயற்பாடுகள் இம்மாதம் 30ஆம் திகதியுடன் முற்றுப்பெறுகின்றன.

இது குறித்து அரசாங்கம் விசேட வர்த்தமானி மூலம் கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்துள்ளது.

அரசாங்கம் எடுத்துள்ள இந்த முடிவு மனித உரிமை நலன்காக்கும் குழுக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு முறைப்படி இயங்க ஆரம்பிக்க முன்னர் அரசாங்கம் எடுத்துள்ள இந்த முடிவு மனித உரிமைகள் தொடர்பான விடயங்களைக் குழப்பும் செயல் என்று அந்தக் குழுக்கள் கண்டித்துள்ளன.

அதேநேரம்—மனித உரிமைகள் பணியகம் மூன்று மாத கால முன்னறிவிப்புடன் கலைக்கப்படும் என்று அரசு உறுதியளித்திருந்த போதும், தற்சமயம் எடுத்துள்ள திடீர் முடிவால் தமது அமைப்பில் பணியாற்றும் ஊழியர்களின் நிலை கேள்விக்குறியாகியுள்ளது என்று மனித உரிமைகள் பணியக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்த அமைப்பின் கொழும்பு அலுவலகத்தில் 83 ஊழியர்களும், 9 பிராந்திய அலுவலகங்களிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை ஊழியர்களும் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## வர்த்தகர்கள் தமது சொந்த லொறி மூலம் பொருள் எடுத்துவர அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். மாவட்டத்துக்குக் கப்பல் மூலம் பொருள்களைத் தருவிக்கும் வர்த்தகர்கள் பருத்தித்துறையில் இருந்து விரைவாகப் பொருள்களை எடுத்துவர அவர்களது லொறிகளைப் பயன்படுத்த அனுமதிப்பது என்று யாழ். செயலகம் முடிவு செய்துள்ளது.

இந்த முடிவின் பிரகாரம் பருத்தித்துறையில் பொருள்களை எடுத்துவர விரும்பும் வர்த்தகர்களை அரச அதிபருக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

## நல்லூர் பிரதேச உலர் உணவு பங்கீட்டு அட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 27

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் மீளாய்வின் பின் புதிய உலர் உணவுப் பங்கீட்டு அட்டைகள் வழங்கும் வேலை எதிர்வரும் 30 ஆம் திகதி பூர்த்தியடையவுள்ளது.

சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் ஏற்கனவே வசிப்பவர்களில் எவராவது இதுவரை மேற்படி பங்கீட்டு அட்டை பெறவில்லையெனில் 30 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழியும் என்கிறார் சமரவீர

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து. புதிய அரசியல் தீர்வுத் திட்டத்தின் மூலம் நாட்டில் ஐக்கியத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்த அரசாங்கம் திட சங்கற்பம் பூண்டுள்ளது.

தபால், தொலைத்தொடர்புத்துறை, தகவற்றுறை அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கங்கடவெவவில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

(இ-3)

## ஜனாதிபதி மீது குற்ற விசாரணைப் பிரேரணை; கொங்கஹகே முயற்சித்தாரா?

கொழும்பு ஜூன் 27

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வரும் முயற்சிக்கு முக்கிய காரண கர்த்தாவாக இருந்தவர் ஐ. தே. கவில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள ஐ. தே. க. எம். பியான சரத் கொங்கஹகே என்று ஐ. தே. கவின் சிரேஷ்ட அதிகாரபூர்வப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விடயமாக அவர் ஐ. தே. கவின் எம். பிக்கள் சிலருடனும், தமிழ்கட்சிப் பிரமுகர்களுடனும் பேச்சுக்கள் நடத்தி இருந்தார் என்றும்.

ஐ. தே. க வைப்பிளவு படுத்த அவர் முயற்சி எடுத்தார் என்பதற்காக அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்தப் பேச்சாளர் தெரிவித்தார்.

(இ-3-150)

## அனலைதீவு ஆஸ்பத்திரி இயங்குகிறது

அனலைதீவு ஆஸ்பத்திரி மீண்டும் இயங்குகின்றது. விடுமுறையில் கொழும்புக்கு சென்ற டாக்டர் வந்து கடமையை ஏற்றுக் கொண்டுள்ளார்.

இதேவேளை ஆஸ்பத்திரி பிரவச விடுதியில் கடமையாற்ற மருத்துவமாது ஒருவரும் திருகோணமலையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ளார். (இ-117)

## விளையாட்டு நிகழ்வு

தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று பகல் 1-30 மணிக்கு பாடசாலையின் புதிய வளவு முன்றலில் ஆரம்பமாகி நடைபெறும்.

பிரதம விருந்தினராக உடுவில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரையாளர் க. சிவராஜாவும் கலந்து கொள்வர்.

## துப்பாக்கி சூட்டில் இறந்த வயோதிபப் பெண்

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாக இனந் தெரியாத வயோதிபப் பெண் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை மாதகலில் இருந்து. இளவாலைப் பொலீஸாரால், யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 65 முதல் 70 வயது மதிக்கத்தக்க இனந்தெரியாத இச்சடலம் இனம் காணும் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (இ- 15)

## 'யுனெஸ்கோ' நடத்திய இலக்கியப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

''யுனெஸ்கோ'' ஆதரவில் யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றில் யாழ். கோட்டப் பாடசாலைகளின் முடிவுகள் கடந்த புதன்று உதயனில் வெளியாகியிருந்தன. நல்லூர்க் கோட்ட பாடசாலைகளின் முடிவுகள் வருமாறு:-

**பேச்சுப் போட்டி**

**பிரிவு - 1**

★ 1 ஆம் இடம் — செல்வி த. தர்ஷிகா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

★ 2 ஆம் இடம் — செல்வி ப. லாவண்யா (யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)

★ 3 ஆம் இடம் — செல்வி வி. ஜெனிற்றா (கோண்டாவில்சி. சி. றோ. க. த. பா.)

**பிரிவு 2**

★ 1 ஆம் இடம் — செல்வி வை. அபர்ணா (கொக்குவில் இந்துக்கல்லூரி)

★ 2 ஆம் இடம் — சு. சதீசன்கன் (யாழ். இந்துக்கல்லூரி)

★ 3 ஆம் இடம் — செல்வி வி. கஜந்தினி, (இந்துமகளிர் கல்லூரி)

**பிரிவு 3**

★ 1 ஆம் இடம்—ஏ. ஜனனன் (யாழ். இந்துக்கல்லூரி)

★ 2 ஆம் இடம்—சி. சேந்தன், (கந்தர்மடம் சைவப்பிரகாச வித்.)

★ 3 ஆம் இடம் — செல்வி யோ. சங்கீதா (பெரியபுலம் மகா. வித்.)

**பிரிவு 4**

★ 1 ஆம்இடம் — செல்வி கு. தர்ஷிகா(கொக்குவில் இந்துக்கல்லூரி)

★ 2 ஆம் இடம் இ. சர்வேஸ்வரா (யாழ். இந்துக் கல்லூரி)

3 ஆம் இடம்—தே. மயூரதன், (செங்குந்த இந்துக் கல்லூரி)

**பிரிவு 5**

இப்பிரிவில் எவரும் பங்குபற்றவில்லை.

**வினாவிடைப் போட்டி**

★ 1 ஆம் இடம்— வி. துஷ்யந்தன் (யாழ். இந்துக்கல்லூரி)

★ 2 ஆம் இடம் — செல்வி ம. மதிவதனி, (பெரியபுலம் மகா. வித்.)

★ 3 ஆம் இடம்—த. றஜனலோஜன் (முத்துத்தம்பி மகா வித்தியாலயம்)

**கவிதைப்போட்டி**

**பிரிவு 5**

★ 1 ஆம் இடம் — செல்வி P. சாமினி, (யாழ் இந்து மகளிர் கல்லூரி)

★ 2 ஆம் இடம் கு. புரந்தரன், (யாழ். இந்துக்கல்லூரி)

★ 3 ஆம் இடம் — செல்வி க. றஜனி, (முத்துத்தம்பி மகாவித்தியாலயம்)

**ஆங்கிலப் பேச்சு போட்டி**

**பிரிவு 5**

★ 1 ஆம் இடம் — செல்வி அ. சுபாஜினி (செங்குந்த இந்துக்கல்லூரி)

**நாடகப்போட்டி**

**(திறந்தபோட்டி)**

★ 1 ஆம் இடம் — கந்தர் மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.

★ 2 ஆம் இடம்— கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்.

3 ஆம் இடம் — வழங்கப்படவில்லை.

**நடனப்போட்டி**

**(திறந்தபோட்டி)**

★ 1 ஆம் இடம் — யாழ். இந்து ஆரம்ப பாடசாலை.

(ஐ)

## நாளை

**ஆனி 14**

**சனிக்கிழமை**

திதி: அட்டமி

முற்பகல் 8.16 வரை.

நட்சத்திரம்: ரேவதி

பின்இரவு 3.50 வரை.

சுபநேரம்: 2 55 - 4 25

ராகுகாலம்: 8 55-10.25

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சமய சந்நிதிகளில்

யாழ். வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயிலின் மஹோற்சவகால விசேட உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 11 ஆம் திகதி வரை நடைபெறும்.

மஹோற்சவ காலத்தில் தினமும் மாலை 4.30 மணிக்கு அபிஷேகம், பூஜையும் மாலை 5.30 மணிக்கு உற்சவ மூர்த்திப் பூஜையும் நிகழ்ந்து சுவாமி உள் வீதிவலம் வருதலும் இடம் பெறும். (ஐ-4)

★ ★ ★

உடுப்பிட்டி பண்டகைப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 5ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். உற்சவ தினங்களில் மாலை 4 மணிக்கு சமயச் சொற்பொழிவுகள் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

தென்புலோலி முருகையா கோயில் வருடாந்த உற்சவத்தின் தீர்த்தோற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-173)

★ ★ ★

எழுதுமட்டுவாள் சிவன் கோயில் மஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை 3 ஆம் திகதி தேர் உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-117)

★ ★ ★

அனலைதீவு கோட்டையடி ஸ்ரீ காளி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கலும் விசேட அபிஷேகமும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (இ-117)

★ ★ ★

கொடிகாமம் கச்சாய் புனித இராயப்பர் தேவாலய நவநாள் உற்சவம் கடந்த 20 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஜூன் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை திருநற்கருணைஆராதனையும் திருப்பலி பூஜையும் இடம் பெற்று மறுநாள் ஞாயிறு காலை திருநாட்பாடற் பலிப்பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுடன் மீண்டும் பேச்சு நடத்தப் போவதில்லை

## அனுருத்த ரத்வத்த தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 27

''யுத்தத்தில் நாம் இன்று 80 சதவீதம் வெற்றி பெற்றுவிட்டோம். ஆகவே எமக்கு 100 சதவீதம் வெற்றி நிச்சயம் நாங்கள் மீண்டும் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தப்போவதில்லை''

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பூஜாப்பிட்டியவில் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

இப்போது புலிகள் நாடெங்கும் தேடித் தேடி என்னைப் பற்றிய தகவல் எடுத்து வருகின்றனர் இதனால் நான் கலந்து கொள்ளும் கூட்டங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை நிலைநாட்டும் பொறுப்பை ஜனாதிபதி என்னிடம் ஒப்படைத்துள்ளார்.

நரன் அந்தப் பொறுப்பில் எமது இராணுவத்தினருடன் சேர்ந்து எண்பது சதவீதத்தை நிறைவேற்றியுள்ளேன். நான் குளிரூட்டும் அறைகளில் இருந்து எந்தவொரு கட்டளையும் பிறப்பிக்கமாட்டேன் யுத்தகளத்துக்கு சென்று வருகின்றேன்-

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

## டக்ளஸ் தேவானந்தாவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

கொழும்பு, ஜூன் 27

அம்பாறை மாவட்டம் ஒலுவிலைச் சேர்ந்த 5 முஸ்லிம் மாணவர்கள் காணாமல் போயிருப்பது தொடர்பாக கொழும்பு மேன் முறையீட்டு நீதி மன்றத்தில் தாக்கலான ஆட்கொணர்வு மனுக்களை விசாரித்த மேல் நீதிமன்ற நீதிபதி ஹெக்டர் யாப்பா ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவை எதிர்வரும் 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என அழைப்பாணை பிறப்பித்தார்.

இந்த மனுக்கள் பரிசீலணைக்கு எடுக்கப்பட்ட சமயம் தேவானந்தா சார்பில் ஆஜரான சட்டத்தரணி மகேஸ்வரி வேலாயுதம், ''மனுதாரர்களால் குறிப்பிடப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் அவர்களைச் சந்திக்க முடியும்'' எனக் கூறினார்.

இதுதொடர்பாக நீதிபதி தெரிவிக்கையில். ''எவரும் எந்தவொரு அரசியல் கட்சியிலும் சேர்ந்து கொள்ள முடியும் அதில் தவறொன்றும் இல்லை ஆனால் அவர்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும். இந்த நபர்களைத் தடுத்து வைக்கவில்லையெனில் அவர்கள் ஏன் தமது பெற்றோர்களிடம் போகவில்லை' என்று கேள்வி எழுப்பினார். (இ-3)

## அதிபர் தரம்- I போட்டிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில்

கொழும்பு ஜூன் 27

அதிபர் தரம் ஒன்றுக்கான போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த பரீட்சை ஆணையாளம் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்துள்ளார் என கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா இந்தப் பரீட்சைக்கு தோற்றுபவர்கள் போக்கு வரத்துக் காரணங்களுக்காக கொழும்புக்கு வர சிரமங்கள் உள்ளதால் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு பரீட்சை ஆணையாளருக்கு கோரிவிக்கை விடுத்திருந்தார் (இ-3)

## பெரியமடு...

(முதலாம் பக்கத் தொடர்)

இராணுவ களஞ்சியங்கள் ஆகியவையே தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றன.

தாண்டிக்குளம் தாக்குதல் நடத்தப்பட்ட அதே பாணியைப் பின்பற்றியே பெரியமடுத் தாக்குதலும் நடத்தப்பட்டது.

சண்டை நடந்த பகுதியில் நேற்று படையினரால் துப்புரவாக்கும் பணி இடம் பெற்றது.

தமது நிலைகளைப் பலப் படுத்துவதிலும் —

இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுப்பதற்குரிய ஏற்பாடுகளில் ஈடுபடுவதிலும் — படையினர் நேற்றுச் செயற்பட்டார்கள் என படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்றும் ஓமந்தைப் பகுதியில் மோதல்கள் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. வானூர்திகள் பறந்தன எனினும் பெரிதாக மோதல் இடம் பெற்றதாகத் தகவல் இல்லை.

பெரியமடு மீதான தாக்குதல் இராணுவ வட்டாரங்களில் மாத்திரம் அல்லாமல் அரசியல் வட்டாரங்களிலும் பேரதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

தரைப்பாதை திறப்பது தொடர்பான நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தாண்டிக்குளம் தாக்குதல் இடம் பெற்றது. அது நடந்து 14 நாள்களில் பெரிமடுவில் தாக்குதல் நடந்துள்ளது.

இரு தாக்குதல்களும் இராணுவ விநியோக மையத்தை இலக்காக வைத்து நடத்தப் பட்டுள்ளன.

இத் தாக்குதல்கள் இராணுவத்துக்கு ஒரு நெருக்கடி நிலையை மட்டுமல்ல பாதுகாப்பு வட்டாரங்களுக்கும். நெருக்கடி நிலையை ஏற்படுத்தி உள்ளன.

இப்படி தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## ஐ.நா. அதிகாரிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

நிதிகளும் நேற்று கொழும்பு திரும்பினர்.

வலி—வடக்கு, தீவுப்பகுதி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மீளக்குடியமர்வு நடவடிக்கைகளை நேரில் பார்த்து உடனடித் தேவைகளை அறிந்து உதவிகளை வழங்க அவர்கள் இணங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

வலி — வடக்குப்பகுதியை மீளக் கட்டியெழுப்ப பலவிதமான உதவிகளை இந்த அமைப்பினர் வழங்க முன்வந்துள்ளனர். (இ-3)

## கப்பல் சேவை...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை 7 மணிக்கு முன்பாக யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேநேரம் — விமானத்தில் செல்ல பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 441, 459, 468 ஆகியவற்றுக்கும் —

பட்டியல் இலக்கம் 001 முதல் 064 வரை உள்ளவர்களுக்கும் — அனுமதி கிடைத்துள்ளது என்று சிவில்நிர்வாக அலுவலகம் தெரிவித்தது. (இ-3)

# மருத்துவபீடத்துக்கு புதிய மாணவர்: செப்ரெம்பரில் முடிவு செய்யப்படும்

## பல்கலைக்கழக மூதவை நேற்று தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

1991, 92, 93, 94 ஆகிய ஆண்டுகளில் ஜி சீ. ஈ. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றி அதனடிப்படையில் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் இரண்டாம் எம். பி. பி. எஸ். பரீட்சைக்கு அப்பால் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் இருப்பதாலும்—

மருத்துவ பீடத்தில் உள்ள பதினொரு துறைகளில் பெரும்பாலானவற்றில் போதிய பேராசிரியர்களோ, விரிவுரையாளர்களோ இல்லாத நிலை காணப்படுவதாலும்—

1995 ஆம் ஆ டு நடந்த ஜி சீ. ஈ உயர்தரப் பரீட்சையில் தோற்றி மருத்துவபீடத்துக்கு அனுமதி பெறத் தகுதியுடைய மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக எதிர் வரும் செப்ரெம்பர் மாதத்தில் முடிவு செய்யப்படும்.

நேற்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக மூதவை விசேடமாகக் கூடி மேற்கண்ட தீர்மானத்தை எடுத்துாளது.

யாழ். மருத்துவபீடத்துக்கு போதிய விரிவுரையாளர்கள் இல்லாத காரணத்தால் புதிய மாணவர்களை அனுமதிப்பதைத் தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்று யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட பேரவை ஏற்கனவே தீர்மானித்திருந்தது.

இத் தீர்மானம் பல்கலைக் கழக மூதவைக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இது தொடர்பாக ஆராய்வதற்காகவே பல்கலைக்கழக மூதவை நேற்று விசேடமாகக் கூடியது. (இ-5)

# மாங்குளம் பகுதியில் இருந்து 90 சதவீதமானோர் இடம்பெயர்வு

வவுனியா, ஜூன் 27

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையின் எதிரொலியாக மாங்குளம் பகுதியில் இருந்து 90 சதவீதமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்று வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்த மக்கள் வசதிகள் எதுவும் அற்ற நிலையில் மரநிழல்களிலும், பொதுக் கட்டடங்களிலும் தங்கி பெரும் இன்னல்களை அனுபவிப்பதாகவும்—

உணவு, மருந்துப் பொருள்கள் இன்றி அவர்கள் கஷ்டப்படுவதாகவும் – தெரிவிக்கப்பட்டது. (இ-3-164)

# இலங்கைத் தமிழருக்கு உதவுமாறு இந்திய அரசிடம் கோரிக்கை

## 45 தமிழ் அமைபபுக்கள் கூட்டாக அறிக்கை

சென்னை, ஜூன் 27

இன்னல்படும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு தேவையான உணவு மற்றும் மருந்துப் பொருள்களை இந்திய அரசும், தமிழக அரசும் மனிதாபிமான முறையில் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்கண்டவாறு தமிழகத்தில் உள்ள 45 தமிழ் அமைப்புக்கள் கூட்டாக இந்திய, மாநில அரசுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அந்த அமைப்புக்கள் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இப்படி கோரப்பட்டுள்ளது.

அந்த அமைப்புக்களின் முக்கிய கோரிக்கைகள் சில வருமாறு:-

★ இலங்கைத் தமிழ் மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் உடன் நிறுத்துமாறு இந்திய அரசு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும்.

★ இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிக்க பிரிட்டன் முன்வந்தது போல, இந்திய அரசும் இலங்கை தமிழ் மக்கள் உரிமைதொடர்பாக பொதுக் கருத்[illegible] டும்.

★ யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுகான மீண்டும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். (இ-3-150)

# ஆயுதப்பயிற்சி அளிக்ககேட்கிறார் திருமலை நகர சபைத் தலைவர்

''எனக்கு வழங்கப்பட்டுள்ள பொலீஸ் பாதுகாப்பை வாபஸ் பொறுவதானால் எனக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி ஆயுதங்களை தாருங்கள்''.

இப்படி திருமலை நகர சபைத் தலைவர் பெ, சூரியமூர்த்தி கோரிக்கை விடுத்தார்.

திருகோணமலை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடத்த சமயமே அவர் இக் கோரிக்கையை விடுத்தார்.

திருமலை நாடாளுமன்ற உறுப்பினர்கள், இராணுவ, கடற்படை, பொலீஸ் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் எனது பாதுகாப்பு விலக்கப்படுகின்றது என்றால் திருமலை நகரம் சகஜநிலைக்குத் திரும்பிவிட்டது என்பதே அர்த்தம். அப்படியாயின் திருமலை நகரில் உள்ள சோதனை நிலையங்களை மூடலாம். சுற்றிவளைப்புகள் தேவையில்லை — என்றார். (இ-3)

## ரோந்து சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்)

னர்.

இத்தாக்குதலில் இரு படையினர் காயமடைந்தனர்.

அதேசமயம் திருகோணமலை மாவட்டத்தில் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதை அடுத்து பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. வாகனங்கள் திடீர் சோதனைக்கு உட்படுத்தப் படுகின்றன. (இ-3-150)

## 4 மின்மாற்றிகள்...

(முதாம் பக்கத் தொடர்)

யாரோரால் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன.

மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டதால் அப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது, அதேநேரம் அன்புவழிபுரம் சந்தியில் அச்சமயம் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்றின் மீது கிரனேட் வீசப்பட்டதாகவும்–

சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் - பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ - 3 - 150)

# தெரிவுக்குழு ஊடாக தொகுதி நிர்ணயம்

## நீலன் திருச்செல்வம் யோசனை

தேர்தல் சீரமைப்பு யோசனைகளின் படி தொகுதிகளை நிர்ணயம் செய்யும் போது அதனை தொகுதி நிர்ணய ஆணைக் குழு ஊடாக மேற்கொள்ளலாம். இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினை தீர்வுகான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், [illegible] யார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-06-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org